DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 777/2022 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | கணேஷன் |
| Father / Husband Name | கூலு |
| Village | |
| Taluk | காளையார்கோவில் |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 09th January 2024.

---

**(1 வது எதிரி ஆஜர்).**

**(2, 3 வது எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் கருமந்தாங்குடியில் குடியிருந்து வருகின்றேன். நான் நெடுஞ்சாலைத் துறையில் சாலைப் பணியாளராக பணிபுரிந்து வருகின்றேன். எங்களுக்கும் 1 வது எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே சொத்து தொடர்பான பிரச்சனை இருந்து வந்துள்ளது. நான் எனது மனைவி பெயரில் கிரையம் வாங்கியிருந்த இடத்திற்கு அருகே புறம்போக்கு இடம் இருந்தது அந்த இடத்தை எதிரிகள் இடத்தை வரப்பு வெட்டியும் அந்த இடத்தில் பிரச்சனை செய்தும் வந்ததார்கள்.

2) கடந்த 14.11.2021ம் தேதி காலை 08.00 மணிக்கு வயலில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக நான் சென்ற போது 1 வது எதிரி ஆட்களுடன் புறம்போக்கு இடத்தில் நின்று கொண்டிருந்தார். அவருடன் 2, 3 எதிரிகளும் அங்குதான் நின்று கொண்டிருந்தார்கள். 3 வது எதிரியின் மகன்கள் தான் 1, 2 எதிரிகள் மூவரும் சேர்ந்து என்னை அசிங்கமாகப்பேசி 1 வது எதிரி சேகர் மண்வெட்டியால் என்னை தலையில் ஓங்கி வெட்டினார். இடது பக்கத் தலையில் வெட்டுக் காயம் ஏற்பட்டது.

3) 2 வது எதிரி ரமேஷ் எனது பிறப்புறுப்பை பிடித்து அழுத்தினார். 3 வது எதிரி கம்பால் என் நெஞ்சில் அடித்தார். அப்போது அங்கு வயலில் இருந்த கருப்பையா மகன் காளைராஜன், ஆண்டி மகன் அஜுத்குமார், மாயன் மனைவி இருளாயி, சேகர் மகன் ரவி மற்றும் மச்சைகாளை மகன் காளீஸ்வரன் ஆகியோர்கள் எதிரிகளை விளக்கி விட்டார்கள். சம்பவத்தில் காயம்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள்.

4) என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**இந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரிகள் தற்போது வரை என்னை இடத்தைக் கேட்டு மிரட்டி வருகிறார்கள். மேலும் என்னை மிரட்டினால் இடத்தைக் கொடுத்து விடுவேன் என்று மீண்டும் மீண்டும் தொல்லை செய்கிறார்கள். மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 09.01.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**